பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**29 01 2026** **7 15**

வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** இந்தியாவில் எரிசக்தி துறையில் முதலீட்டுக்கான வாய்ப்புகள் பெருமளவில் உள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

**2.** விமான விபத்தில் உயிரிழந்த மகாராஷ்டிர துணை முதலமைச்சர் அஜித் பவாரின் இறுதிச்சடங்கு புனே மாவட்டத்தில் உள்ள பாராமதியில் இன்று அரசு முழு மரியாதையுடன் நடைபெறுகிறது.

**3.** கேரளாவில் வரும் நிதியாண்டுக்கான பட்ஜெட் அம்மாநில சட்டப்பேரவையில் இன்று தாக்கல் செய்யப்படுகிறது.

**4.** ஈரான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தினால் உரிய பதிலடி கொடுக்கப்படும் என்று அந்நாடு எச்சரித்துள்ளது.

**5.** பஹ்ரைனில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சித்தார்த் பாந்தியா - சாகேத் மைனேனி இணை காலிறுதி சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

உலகளாவிய எரிசக்தி துறையின் தலைமைச் செயல் அதிகாரிகளுடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி நேற்று உரையாடினார்.

புதுதில்லியில் அவரது இல்லத்தில் நடைபெற்ற இந்த சந்திப்பின்போது இந்தியாவின் வலுவான பொருளாதார சூழலை அவர் எடுத்துரைத்தார்.

உலகின் 3வது பெரிய பொருளாதார நாடாக இந்தியா விரைவாக முன்னேறுவதாக அவர் கூறினார்.

உலகளாவிய எரிசக்தி, தேவை - விநியோகம் இடையேயான சமநிலைக்கு இந்தியா முக்கிய பங்கு வகிக்கும் என்று அவர் தெரிவித்தார்.

எரிசக்தி துறையில் இந்தியாவில் முதலீட்டுக்கான வாய்ப்புகள் குறித்து பிரதமர் சுட்டிக்காட்டினார்.

இத்துறையில் அரசு மேற்கொண்டுள்ள சீர்திருத்தங்களை பிரதமர் எடுத்துரைத்தார்.

எரிசக்தி துறையின் ஆய்வு மற்றும் உற்பத்தியில் சுமார் 100 பில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு முதலீட்டுக்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாக பிரதமர் தெரிவித்தார்.

<<<<>>>>

நடப்பு நிதியாண்டுக்கான பொருளாதார ஆய்வறிக்கை இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகிறது.

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் இதை தாக்கல் செய்கிறார்.

தலைமைப் பொருளாதார ஆலோசகரின் வழிகாட்டுதலின்படி மத்திய நிதியமைச்சகத்தின் பொருளாதார விவகாரத்துறை இந்த ஆய்வறிக்கையை தயாரித்துள்ளது.

நாட்டின் தற்போதைய பொருளாதார சூழல் மற்றும் எதிர்கால கண்ணோட்டம் குறித்த விரிவான அம்சங்கள் இந்த பொருளாதார ஆய்வறிக்கையில் இடம்பெறுகிறது.

வரும் நிதியாண்டுக்கான பட்ஜெட் அடுத்த மாதம் ஒன்றாம் தேதி தாக்கல் செய்யப்படுகிறது.

<<<<>>>>

வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர், உஸ்பெகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் திரு. Bakhtiyor Saidov உடன் தொலைபேசி வாயிலாக இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து விவாதித்தார்.

இருநாட்டு உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான வழிவகைகள் குறித்தும் இந்தியா - உஸ்பெகிஸ்தான் இடையேயான ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்தும் தாங்கள் விவாதித்ததாக திரு. ஜெய்சங்கர் சமூக வலைதளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இரு நாடுகளுக்கு இடையேயான இருதரப்பு நல்லுறவு எதிர்காலத்தில் தொடரும் என்றும் திரு. ஜெய்சங்கர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

விமான விபத்தில் உயிரிழந்த மகாராஷ்டிர துணை முதலமைச்சர் அஜித் பவாரின் இறுதிச்சடங்கு புனே மாவட்டத்தில் உள்ள பாராமதியில் இன்று முழு அரசு மரியாதையுடன் நடைபெறுகிறது.

காலை 11 மணியளவில் நடைபெறும் இந்த இறுதிச்சடங்கில் மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, மகாராஷ்டிர முதலமைச்சர் திரு. தேவேந்திர ஃபட்னவிஸ் மற்றும் அம்மாநில அமைச்சர்கள் கலந்துகொள்கின்றனர்.

அஜித் பவாரின் மறைவையொட்டி நேற்று முதல் 3 நாட்களுக்கு அம்மாநிலத்தில் பொதுவிடுறை அளிக்கப்பட்டுள்ளது.

அரசு அலுவலகங்களில் தேசியக்கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்படுகிறது.

<<<<>>>>

கேரளாவில் வரும் நிதியாண்டுக்கான பட்ஜெட் அம்மாநில சட்டப்பேரவையில் இன்று தாக்கல் செய்யப்படுகிறது.

அம்மாநில அரசின் பதவிக்காலம் இந்த ஆண்டு மே மாத த்துடன் முடிவடைய உள்ள நிலையில் வரும் நிதியாண்டுக்கான பட்ஜெட்டை கேரள நிதியமைச்சர் திரு. கே.என். பாலகோபால் சமர்ப்பிக்க உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

நாடு முழுவதும் நடப்பு ரபி பருவத்தில் இதுவரை **660** லட்சம் ஹெக்டேருக்கும் மேலான பரப்பளவிற்கு சாகுபடி செய்யப்பட்டுள்ளதாக மத்திய வேளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது கடந்த ஆண்டைவிட **18** லட்சம் ஹெக்டேர் அதிகம் என்று கூறியுள்ளது.

கோதுமை **334** லட்சம் ஹெக்டேர் அளவிற்கும், அரிசி **44** லட்சம் ஹெக்டேர் அளவிற்கும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

பருப்பு வகைகளின் சாகுபடி 137 லட்சம் ஹெக்டேராக அதிகரித்துள்ளது என்றும், எண்ணெய்வித்துக்களின் சாகுபடி 97 லட்சம் ஹெக்டேரை கடந்துள்ளது என்றும் மத்திய வேளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

அரசு இலட்சினைகளை தவறாகப் பயன்படுத்துவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய விளையாட்டு அமைச்சகம் எச்சரித்துள்ளது.

இதுகுறித்து அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், சில விளையாட்டு கூட்டமைப்புகள் அரசின் இலட்சினை, விளையாட்டு அமைச்சகம் மற்றும் இந்திய விளையாட்டு ஆணையத்தின் இலட்சினைகளை தங்களுடைய சின்னங்களைப் போல பயன்படுத்துவது கண்டறியப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

இந்த அமைப்புகள் மத்திய அரசின் ஒரு பகுதி என்பதுபோல் தவறான எண்ணத்தை ஏற்படுத்துவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விளையாட்டு கூட்டமைப்புகள் மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டு நிதியுதவி பெற்றாலும் கூட அரசின் பெயரையோ

அல்லது இலட்சினையையோ தங்களுடைய அலுவல் பணிகளுக்கு பயன்படுத்த உரிமை இல்லை என்று கூறப்பட்டுள்ளது.

எனினும் தங்கள் விளையாட்டுக் கூட்டமைப்பு மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டது என்பதை எழுத்துப்பூர்வமாக மட்டுமே குறிப்பிட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசு நிதியுதவி வழங்கியிருந்தால் குறிப்பிட்ட விளையாட்டுப் போட்டிகளுக்கான விளம்பரப் பதாகைகள் மற்றும் நினைவுப் பரிசுகளில் மட்டும் அரசு அல்லது இந்திய விளையாட்டு ஆணையத்தின் இலட்சினையை பயன்படுத்தலாம் என்றும் விளையாட்டு அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<>>>>

மேற்குவங்க மாநிலம் நாஸிராபாதில் நிகழ்ந்த தீ விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 21ஆக அதிகரித்துள்ளது. 27 பேரைக் காணவில்லை என்று கூறப்படுகிறது.

தீ விபத்து நடந்த கிடங்குப் பகுதியில் தேடுதல் பணி நடைபெற்று வருகிறது.

தீ விபத்து நிகழ்ந்த கிடங்கின் உரிமையாளரை நரேந்திரபூர் காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

விபத்துக்கான காரணம் குறித்து காவல்துறையினரும், தீயணைப்புத் துறையினரும் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு தலா 10 லட்சம் ரூபாய் நிவாரணத் தொகை வழங்கப்படும் என்று மேற்குவங்க அரசு அறிவித்துள்ளது.

<<<<>>>>

அணுசக்தி தொடர்பான பேச்சுகள் தடைபட்டுள்ளதையடுத்து, ஈரானுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

முந்தைய நடவடிக்கைகளை விட இது கடுமையானதாக இருக்கும் என்று அவர் கூறியுள்ளார்.

அணு ஆயுதங்களை நீக்குவது தொடர்பான பேச்சுகளில் விரைவில் பங்கேற்குமாறு ஈரானை திரு. ட்ரம்ப் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்நிலையில் ஈரான் மீது எந்த வகையில் நடவடிக்கை எடுத்தாலும் உடனடியாக அதற்கு ஈரான் ராணுவம் உரிய பதிலடி கொடுக்கும் என்று அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் திரு. அப்பாஸ் அராக்சி தெரிவித்துள்ளார்.

எனினும் ஈரான் நியாயமான மற்றும் சமநிலையான அணுசக்தி ஒப்பந்தத்தை விரும்புவதாகவும், அணு ஆயுதங்களை எப்போதும் பயன்படுத்துவதில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

அச்சுறுத்தல் மற்றும் வற்புறுத்தல் மூலமான நடவடிக்கையை ஈரான் நிராகரிப்பதாகவும் வெளியுறவு அமைச்சர் திரு. அப்பாஸ் அராக்சி குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

தில்லி, ஹரியானா, சண்டிகட், ஹிமாச்சலப்பிரதேசம் மற்றும் பஞ்சாப் பகுதிகளில் இன்று கடும் குளிர் நிலவக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பிஹார், மத்தியப்பிரதேசம், ஒடிசா, ராஜஸ்தான், சிக்கிம், உத்தரப்பிரதேசம் மற்றும் உத்தராகண்ட் மாநிலங்களின் சில பகுதிகளில் கடும் பனிமூட்டம் நிலவக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

பஹ்ரைனில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சித்தார்த் பாந்தியா - சாகேத் மைனேனி இணை காலிறுதி சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்த இணை, 6-3, 6-7, 10-7 என்ற செட் கணக்கில் மற்றொரு இந்திய

இணையான ஜீவன் நெடுஞ்செழியன் - ராம்குமார் ராமநாதன் இணையை வென்றது.

மற்றொரு ஆட்டத்தில் இந்தியாவின் அர்ஜூன் கதே - போலந்தின் **Piotr - Matuszewski** இணை, போலந்தின் **Szymon Kielan - Philip Pieczonka** இணையை **4-6, 6-2, 10-3** என்ற செட் கணக்கில் வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறியது.

-------------

ஹைதராபாத் சர்வதேச டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் **Ishaq Eqbal** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

நேற்று நடைபெற்ற முதல் சுற்று ஆட்டத்தில் இவர் ரஷ்யாவின் **Nikita Lanin**-ஐ **6-4, 6-2** என்ற செட் கணக்கில் வீழ்த்தினார்.

-------------

இந்திய அணிக்கு எதிரான **4**வது ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் நியூசிலாந்து அணி **50** ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த நியூசிலாந்து அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 215 ரன் எடுத்தது.

216 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய இந்திய அணி 18 புள்ளி 4 ஓவரில் 165 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

5 போட்டிகளைக் கொண்ட இத்தொடரில் இந்தியா 3-1 என்ற ஆட்டக் கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

5வது மற்றும் இறுதி ட்வெண்ட்டி ட்வெண்ட்டி போட்டி நாளை மறுநாள் திருவனந்தபுரத்தில் நடைபெற உள்ளது.

---------------

தமிழ்நாடு - பரோடா அணிகளுக்கு இடையேயான ரஞ்சிக் கோப்பை கிரிக்கெட் போட்டி சேலத்தில் இன்று தொடங்குகிறது.

சேலத்தில் நடைபெற உள்ள இப்போட்டி காலை மணி 9.30க்கு தொடங்குகிறது.

---------------

சந்தோஷ் கோப்பைக்கான கால்பந்து போட்டியில் தமிழ்நாடு - மேற்குவங்க அணிகளுக்கு இடையேயான ஆட்டம் **1-1** என்ற கோல் கணக்கில் டிராவில் முடிவடைந்தது.

**<<<<The End>>>>**